## VII. கீழ்காணும் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x2=4

36. பள்ளியின் விளையாட்டுத்திடலில் விளையாடிக் கொண்டிருந்தபோது நண்பனுக்கு காலில் பலத்த அடி. நீ என்ன செய்வாய்?

37. இலக்கியா தன் பெற்றோருடன் உயிரியல் பூங்காவிற்குச் சென்றாள். தன்னருகே துள்ளி வந்த மானைச் சிறு கல்லால் அடித்தாள். மான் சுருண்டு ஓடியது. விலங்குகளைப் பார்த்துக்கொண்டே குரங்குகள் இருக்கும்இடத்திற்குச் சென்றவள், கீழே இருந்த குச்சியை எடுத்து குரங்கின்மீது வீசினாள்.வேர்க்கடலையைத் தின்று விட்டு பறவைகள் பகுதியில் இருந்த மயில்கூண்டுக்குள் தோலை வீசினாள். பாம்புகளைப் பார்க்கச் சென்ற இலக்கியா, பாம்புகள் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டிகளைத் தட்டிக் கொண்டே வந்தாள். திடீரென ஒரு பாம்பு படமெடுத்துச் சீறியது. அதனைக் கண்டு பயந்து அலறிய படி தாயைக் கட்டியணைத்துக் கொண்டாள்.

அ) இலக்கியா, மானைக் கல்லால் அடித்தது சரியா?

ஆ) பறவைகள், விலங்குகளிடம் நாம் எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும்?



# முதல் பருவத் தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு

## தமிழ்

வகுப்பு :6 மதிப்பெண்: 60
நேரம் : 2.00 மணி

## I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 14x1=14

**அ. பொருள் தருக.**

1. என்பு 2. வையகம்

**ஆ) பிரித்தெழுதுக.**

3. திருவருட்பா 4. நாய்க்கால்

**இ) சேர்த்தெழுதுக.**

5. புகழ் + இழந்தேன் 6. பத்து + பாட்டு

**ஈ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

7. இராமலிங்க அடிகளார்___________ என்னும் ஊரில் பிறந்தார்.

8. திருக்குறள் ___________ எனப் போற்றப்படுகிறது.

9. பாட்டுக்கொரு புலவன் எனப் போற்றப்படுபவர்___________.

10. குழந்தையைத் தொட்டிலில் இட்டு தாய் பாடும் பாட்டு ___________ஆகும்.

**உ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

11. பூமியை ___________ வருவேன். (வலம் / வளம்)

12. தென்றல் ___________ படித்தாள். (படம் / பாடம்)

**ஊ) தொடரில் அமைத்து எழுது**

13. கல் 14. நம்பிக்கை



Scanned by CamScanner

61

## II. கீழ்க்காணும் வினாக்களில் ஆறு வினாக்களுக்கு நான்கு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 6x2=12

15. இராமலிங்க அடிகளார் எழுதிய உரைநடை நூல்கள் யாவை?
16. அன்பில்லாத வாழ்க்கை எத்தகையது?
17. ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் இடங்களில் இரண்டினை எழுதுக.
18. நாலடியார் - நூற்குறிப்புத் தருக
19. பாரதியாரின் கனவுகளுள் இரண்டினை எழுதுக.
20. வலசைபோதல் என்றால் என்ன?
21. கல்விக்கு விளக்காக அமைவது எது?
22. திருமணம் மற்றும் பிற நிகழ்ச்சிகளில் பாடப்படும் பாடல் எது?
23. பறவை, மனிதர்களின் நல்ல நண்பன் எவ்வாறு?
24. நாலடியார் கருத்துப்படி நன்மை செய்வோர் எதனைப் போன்றவர்?

## III. அடிபிறழாமல் எழுதுக. 2x2=4

25. கண்ணில் கலந்தான் ........ எனத் தொடங்கும் வாழ்த்துப்பாடல்.
26. அன்பிலார் .............. எனத் தொடங்கும் குறள்.

## IV. கீழ்க்காணும் வினாக்களில் மூன்றனுக்கு விடை எழுதுக. 3x2=6

27. **கீழ்க்கண்ட சொற்களில் உள்ள இன எழுத்துக்களை எடுத்து எழுதுக.**
    சிங்கம், மஞ்சள், கம்பன், தென்றல்

28. இன்புற்றார் எய்தும் சிறப்பு - இச்சொற்றொடரில் உள்ள குறில், நெடில் எழுத்துக்களை எடுத்தெழுதுக.

29. **பொருத்தமான ஒலிக்குறிப்புச் சொற்களைக் கண்டறிந்து நிரப்புக.**
    (சோவென்று, பளிச்சென்று, பட்டென்று, கும்மென்று)

அ) வானத்தில் மின்னல் ________________ மின்னியது.

ஆ) மல்லிகை ________________ மணம் பரப்பியது.

இ) மழை ________________ பெய்தது.



30. முதலெழுத்துகள் யாவை?
31. தமிழ்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## V. கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக. 2x5=10

32. குறிஞ்சிப்பாட்டு நூலைப் பதிப்பிக்க உ.வே.சா மேற்கொண்ட முயற்சிகள் யாவை?

**(அல்லது)**

நாலடியார் கூறும் நட்பு குறித்து எழுதுக.

33. பறவைகளை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

**(அல்லது)**

மனைக்கு விளக்கம் மடவார் என்னும் பாடலில் நான்கு மணிகளைப் போல அமைந்துள்ள கருத்துக்கள் யாவை?

## VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக. 2x5=10

34. 'கடைசி வரை நம்பிக்கை' என்னும் கதையைச் சுருக்கி வரைக.

**(அல்லது)**

'வீரச்சிறுவன்' என்னும் கதையைச் சுருக்கி எழுதுக.

35. விடுப்பு வேண்டி உன் வகுப்பு ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

பின்வரும் சொற்களைஇறுதியாக வைத்து இரண்டு அடிகளில் கவிதை எழுதுங்கள்.

1. வீடு, கூடு 2. அரும்பு, கரும்பு



Scanned by CamScanner